VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

உழவர்
சிந்தனைக் களஞ்சியம்

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

2020 மலர் 4 இதழ் 2



வாணவராயர்
வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

*மலர் 4 ✤ ஏப்ரல் 2020 ( பங்குனி - சித்திரை) ✤ இதழ் 2*


| | | |
|---|---|---|
| வெளியீடு | : | வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>மணக்கடவு, பொள்ளாச்சி – 642 103 |
| நிறுவனர் | : | அருட்செல்வர் முனைவர் **நா. மகாலிங்கம்** |
| தலைவர் | : | முனைவர் **ம. மாணிக்கம்**<br>என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி |
| தாளாளர் | : | திருமதி. **கி. கற்பகவள்ளி**<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| ஊக்கம் | : | முனைவர் **சி. இராமசாமி,** பி.எச்.டி.,<br>செயலர், என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி<br><br>முனைவர் **நா. கெம்பு செட்டி,** பி.எச்.டி.,<br>இயக்குனர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br><br>முனைவர் **சி. சின்னுசாமி,** பி.எச்.டி.,<br>முதல்வர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| ஒருங்கிணைப்பாளர் | : | திரு. **கா. காளிதாஸ்,** உதவிப் பேராசிரியர்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| தொகுப்பு | : | முனைவர். **சி. கிருஷ்ணமூர்த்தி**<br>திரு. **ல. சுந்தரமூர்த்தி**<br>முனைவர். **ரா. முத்துகிருஷ்ணன்**<br>திருமதி. **டி.ஆர். மஞ்சுளா**<br>திரு. **ரா. ஜீவா**<br>உதவிப் பேராசிரியர்கள் |
| வடிவமைப்பு | : | திரு. **வெ. பிரவீன்கார்த்திக்**<br>திரு. **பா. ஹரிபிரசாத்**<br>விரிவுரையாளர்கள் |
| விநியோகித்தல் | : | திரு. **எ. குமார செல்வன்** – உதவி நூலகர் |

# பொருளடக்கம்


| வ. எண் | கட்டுரைகள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1. | ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் - மடத்துக்குளம் | ... | 3 |
| 2. | தொழில் துறை பார்வை | ... | 4 |
| 3. | கிராம தங்கள் திட்டத்தின் கீழ் பெற்ற அனுபவம் | ... | 5 |
| 4. | ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் - உடுமலை | ... | 6 |
| 5. | ஊரக வேளாண் பயிற்சித் திட்ட அனுபவங்கள் | ... | 8 |
| 6. | ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் - ஆனைமலை | ... | 11 |
| 7. | கிராம தங்கள் திட்டம் - கிணத்துக்கடவு | ... | 13 |
| 8. | கிராம தங்கள் திட்டம் - தொண்டாமுத்தூர் | ... | 14 |
| 9. | இயற்கை விவசாயம் மடத்துக்குளம் | ... | 16 |
| 10. | சட்டை அணியா சாமியப்பனின் மூலிகை வடிநீர் | ... | 17 |
| 11. | ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் - தாராபுரம் | ... | 18 |
| 12. | தென்னைக்கு ஊட்டசத்து டானிக் | ... | 19 |
| 13. | ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் - குடிமங்கலம் | ... | 20 |
| 14. | இயற்கை விவசாயம் | ... | 22 |
| 15. | இயற்கை ஊட்டச்சத்து திரவியங்கள் | ... | 23 |



உழவர் சிந்தனைக் களஞ்சியம் இதழில் வரும் கருத்துக்களுக்கு
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்



**தொடர்புக்கு : 74026 18016**

**வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், பொள்ளாச்சி.**

அச்சிட்டோர் :

**ருக்மணி ஆப்செட் பிரஸ்**

E-32 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோவை - 641 021.

போன் 0422 - 2672789, 2672435 மெயில் : office.rukmaniop@gmail.com

# ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் மடத்துகுளம் வட்டாரம்

**அறிமுகம்**

ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டத்தின் கீழ் மடத்துக்குளம் வட்டாரத்தில் 90 நாட்கள், ஒன்பது மாணவிகளாக பயிற்சி பெற்றோம். இத்திட்டத்தில் 10 நாட்கள் அரசு சாரா அமைப்பிலும் 10 நாட்கள் தொழில் துறை இணைப்பிலும் இணைந்திருந்தோம். மேலும் 60 நாட்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சிப் பெற்றோம். இதிலிருந்து நாங்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறோம்.

**உதவி வேளாண் – இயக்குநர் இணைப்பு**

உதவி வேளாண் இயக்குநர் அலுவலகம் எளிதில் விவசாயிகளின் போக்குவரத்திற்கு ஏற்றவாறு பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. உதவி வேளாண் இயக்குநர் திரு. இராஜேஸ்வரி அவர்கள் மற்றும் வேளாண் அலுவலர் திரு. இந்திரா ப்ரியதர்ஷினி அவர்கள் வேளாண் திட்டத்தை பற்றி எடுத்துரைத்தனர் பிரதான் மந்திரி கிருஷி மந்தான் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒய்வூதியம் வழங்குகின்றனர். மேலும் பயிர் காப்பீட்டுத்திட்டம், நீர் மேலாண்மை போன்ற திட்டத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்பத்துகின்றனர். மேலும் இத்துறையின் கீழ் கூடுதலாக விதை சான்று அலுவலகம், கால்நடை துறை, உழவர் சந்தை, உடுமலைப் பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தோட்டக்கலைத்துறை போன்ற துறைகளில் பயிற்சி பெற்றோம்.

**அரசு சாரா அமைப்பு - CHDP (Community Heath and Devlopment Programme)**

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மடத்துக்குளம் தாலூக்காவில் அமைந்துள்ள அரசு சார அமைப்பை (CHDP) பார்க்க நேரிட்டது. அங்கு திரு. ஞானையா அவர்களை சந்திக்க நேர்ந்தது. இந்த அரசு சாரா அமைப்பில் நாங்கள் 10 நாட்கள் பயிற்சி பெற்றோம்.

அங்கு எங்களுக்கு பயிற்சி அளித்தவர்கள், திரு பென்னட் மற்றும் திரு. ஞானேஸ்வர் ஆவர். திரு. ஞானேஸ்வர் வானிலை மாற்றங்களை பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார். ஆதலால், நாங்கள் அதைப் பற்றி விழிப்புணர்வு பெற்றோம்.

இத்தகைய அரசு சாரா அமைப்பு எவ்வாறு நிதியுதவி பெறுகிறார்கள் என்று அறிந்து கொண்டோம். இவர்களின் நலத்திட்டத்தின் மூலம் பல கிராமங்கள் மற்றும் அதில் உள்ள பொதுமக்கள் பயன் அடைகின்றனர். இந்த அமைப்பு ஆனது கிராமத்தில் உள்ள பொதுமக்களின் வளர்ச்சிக்காக தையல் மெஷின், கறவை மாடுகள் போன்றவைகளை சில மானியங்கள் தரும் திட்டத்தின் மூலம் பெற்று கிராம வளர்ச்சிக்காக சில பொது சேவைகள் செய்கின்றனர். நாங்கள் 10 நாட்கள் இருந்த காலகட்டத்தில் சில

கிராமங்களுக்கு மற்றும் பள்ளிகளுக்கு சென்றோம். அங்கு அரசு சாரா அமைப்பால் அவர்கள் பயன் அடைந்ததை கேட்டறிந்தோம். ஆகையால், இவ்வரசு சாரா அமைப்பில் பல விழிப்புணர்வுகளை பெற்றோம். மேலும் அரசு சாரா அமைப்பை எப்படி அமைக்க வேண்டும் என்று அறிந்தோம் மற்றும் கணக்கு பதிவு, திட்டத்தின் பதிவேடுகள் கண்டறிந்தோம். இக்காலகட்டம் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ●

# தொழில் துறை பார்வை

எங்கள் ஊரக வேளாண்மை பயிற்சித் திட்டத்தின் கீழ் தொழில் துறை பார்வை அமைந்துள்ளது. இதன் பகுதியாக கிருஷ்ணா காயர் இண்டஸ்ட்ரி மற்றும் ஜெயின் அக்ரோ இண்டஸ்ட்ரி காண நேரிட்டது. அதில் பல தகவல்களை அறிந்து கொண்டோம்.

**கிருஷ்ணா காயர் இண்டஸ்ட்ரி :**

இத்தொழிற்சாலையில் தென்னை மட்டையிலிருந்து எவ்வாறு நாரை உரித்து எடுப்பதைப் பற்றி அறிந்தோம். மேலும் காயர் சுத்திகரிப்பு சேகரிப்பு மற்றும் மதிப்புக்கூட்டல் பற்றியும் தெரிந்துகொண்டோம்.

**ஜெயின் அக்ரோ இண்டஸ்ட்ரி :**

இத்தொழிற்சாலை திசு வளர்ப்பு, உயர் அடர்த்தி, தீவிர உயர் அடர்த்தி, சொட்டு நீர் பாசனம், பாசனக்கருவிப் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் PVC மற்றும் HDPE குழாய் வேளாண் கரைசல் மற்றும் நீரிழப்பு உணவு தயாரிக்கும் முறையிலும் ஈடுபட்டுள்ளது.

இங்கு அதிக உற்பத்தி பெருவதற்காக மா, பப்பாளி, மாதுளை, முந்திரி மற்றும் நெல்லி போன்ற மரங்களில் தீவிர உள் அடர்த்தி முறை பின்பற்றி அதிக லாபம் பெருகின்றனர். இதன் மூலமாக அதிக மகசூல் பெருகின்றனர் இதை நாங்கள் நேரில் கண்டோம். இங்கு சொட்டு நீர் பாசனத்தில் பல புதிய முறைகளைக் கண்டறிந்து அதனை பயன்படுத்தியும் வருகின்றனர் மேலும் அவற்றை விவசாயிகளுக்கு மானியத் திட்டத்தின் கீழ் வழங்கி வருகின்றனர். இப்பாசன முறைகளாக பல்வேறு அளவில் குழாய்களை உற்பத்தி செய்கின்றனர்.

இவர்கள் மா, மாதுளை மற்றும் வாழையில் திசு வளர்ப்பு செய்கின்றனர் இம்முறையில் உருவாகும் கன்றை விவசாயிகளுக்கு நாற்றாக விற்பனை செய்கின்றனர். இவர்கள் மூலம் வேளாண்மை முன்னேற்றத்திற்கான பல புதுமையான தொழில் நுட்பங்களை நாங்கள் கற்றுக் கொண்டோம். மேலும் இம்முறைகளை கிராம தங்கள் திட்டத்தில் பல விவசாயிகளுக்கு கூறினோம். ●

# கிராம தங்கள் திட்டத்தின் கீழ் பெற்ற அனுபவம் இயற்கை விவசாயம் பற்றி திரு. இராமசாமியின் குறிப்பு ..

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மடத்துகுளம் தாலூகாவில் பாப்பன்குளம் என்ற கிராமத்தை காண நேர்ந்தது. அக்கிராமத்தில் பசுமை சூழ்ந்த பகுதியில் திரு. ராமசாமி அவர்களை சந்திக்க நேர்ந்தது.

அவர் தனது தோட்டத்தில் பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்கப்பட்ட பயிர்களுக்கு அவரே இயற்கை முறையில் ஜீவாமிர்தம், தசகாவியம், பஞ்சகாவியம் ஆகியவற்றை இயற்கை முறையில் தயாரித்து உரமாக பயன்படுத்துகிறார் ரசாயனம் முறையை பயன் படுத்தவில்லை.

ஜீவாமிர்தம் தயாரிப்பதை பற்றி செய்முறை விளக்கம் கொடுத்தார். மாட்டுசாணம் - 5 கிலோ, கோமியம் - 1 லிட்டர், வெல்லம் - 2 கிலோ, பயிர்வகை மாவு - 2 கிலோ, தண்ணீர் - 200 லிட்டர் இவற்றை நன்றாக கலந்த 45 நாட்கள் பதப்படுத்தி வைக்க வேண்டும். அதை நிழலான இடத்தில் தொட்டியின் வாய் பகுதியை மூடி வைக்க வேண்டும். தினமும் மூன்று முறை வீதம் மூன்று நாட்களுக்கு கடிகாரச் சுற்றில் ஒரு குச்சியின் மூலம் நன்றாக ஒரு நிமிடம் கலக்கி விட வேண்டும்.

தச காவியம் தயாரிப்பதை பற்றியும் அவர் விளக்கம் அளித்தார், மாட்டுசாணம், மாட்டின் சிறுநீர், பால், தயிர் மற்றும் நெய் இவற்றை வேம்பு, எருக்கம், கொழுஞ்சி, நொச்சி, ஊமத்தை, காட்டாமணக்கு, புங்கம் இந்த தாவரங்களை மாட்டு கோமியத்தில் 10 நாட்கள் ஊற வைக்க வேண்டும். அந்த தாவர வடிசாறை வடிகட்டி ஒவ்வொரு 5 லிட்டர் பஞ்சகாவிய கரைசலில் 1 லிட்டர் என்ற அளவில் சேர்க்கவும். இந்தக் கரைசலை 25 நாட்களுக்கு நன்றாக குலுக்கவும். அந்த நேரத்தில் தாவர வடிசாறை பஞ்சகாவியத்தை நன்றாக கலக்கவும்.

பூச்சிவிரட்டி தயாரிக்கும் முறையை பற்றி விளக்கம் அளித்தார். அதில், வேம்பு, ஆமணக்கு, நொச்சி, கொழுஞ்சி, தாவரங்களையும், கரும்பு வெல்லம் - 1/2 கிலோ, மாட்டுக் கோமியம் - 1 லிட்டர் அதை அனைத்தையும் நன்றாக நீரில் ஊறவைக்க வேண்டும் அதை வடிகட்டி பயிரின் மீது தெளித்தால் பூச்சிகள் கட்டுப்படும். இவற்றை பயன்படுத்துவதால், பூச்சி மற்றும் நோய்களை குறைத்து, மகசூலை அதிகப்படுத்துகிறது. அதனால் இவர் இயற்கை விவசாயத்தை சிறப்பான முறையில் செய்து வருகிறார்.

மேலும் விவசாயிகளுக்கு அசோலா தயாரிப்பு முறை, காளான் வளர்ப்பு, மண்புழு உரம், விதை நேர்த்தி போன்றவற்றை பயிற்சி அளித்தோம். ஜீவாமிர்தம் தயாரிப்பு முறை, வேப்பங்கொட்டை கரைசல் தயாரிப்பு, ஆகியனவற்றை செயல் விளக்கம் அளித்தோம்.

கிராம தங்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பிரச்சனைகள் அவர்கள் பின்பற்றும் பாரம்பரிய தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டோம்.

# ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டம்
# உடுமலை வட்டாரம்

மேற்கு தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்தில் அமைந்துள்ள பசுமை நிறைந்த ஊரான உடுமலை தாலூக்காவே எங்களுக்கு கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஊராகும். இத்தாலுக்காவில், தென்னை மரங்களும், மக்காச்சோளமும் பெரிதளவில் பயிரிடப்படுகிறது. மேலும் பட்டுப்பூச்சி வளர்ப்பு பெரும்பான் மையாக காணப்படுகிறது.

**வேளாண் துறை இணைப்பு :**

முதல் 10 நாட்கள் நாங்கள் உடுமலை வேளாண் உதவி இயக்குநர் செல்வி அறிவுமதி அவர்களின் அறிவுரையின் கீழ் செயல்பட்டோம். மேலும், வேளாண் துறையின் நிறுவன அமைப்பை பற்றி விளக்கினார். வேளாண் துறையில் செயல்படும் திட்டங்கள் பற்றியும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் குறித்தும், பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் செயல்பாடு போன்றவற்றை அறிந்து கொண்டோம். இத்துறையின் துணை துறைகளான விதை சான்று துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை துறை வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிக துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டோம்.

**அரசு சாரா அமைப்புடன் எங்கள் இணைப்பு :**

அடுத்த 10 நாட்களுக்கு பொள்ளாச்சியில் உள்ள சேவாலயம் என்னும் அரசு சாரா அமைப்புடன், நாங்கள் இணைக்கப் பட்டோம். அவர்களுடன் சேர்ந்து பல்வேறு சமூக பணிகளில் ஈடுபட்டோம். சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் அமைத்தல், மகாத்மா காந்தியின் சுயசரிதை புத்தகத்தை விற்றல், ராமகாரியம் (முதியோர்கள், மனநல பாதிக்கப்பட்டோர்), பழங்குடியின மக்களை சந்தித்தல், கோபால்சாமி மலையில் மலையேற்றப் பயிற்சி, போக்குவரத்து விழிப்புணர்வு முகாம், கண் மற்றும் ரத்ததான விழிப்புணர்வு முகாம், சட்ட விழிப்புணர்வு முகாம் போன்றவற்றில் பங்கேற்றோம்.

ஆளுமை திறன் மேம்படுத்தல் பயிற்சி போன்றவை எங்களின் தனித்துவத்தை அறியவும் எங்கள் தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்ளவும் பேருதவியாக இருந்தது.

இந்த 10 நாள் எங்கள் வாழ்நாள் முழுவதும் சுமக்கத் தகுந்த நினைவுகளாக அமைந்தன. நாங்கள் சேவாலயம் அமைப்பில் ஒரு அங்கமாக மாறி மேலும் பல சேவைகளை புரிய ஆவலாக உள்ளோம்.

**வேளாண் சார்ந்த தொழில் நிறுவனங்களுடன் இணைப்பு :**

**நீரா இறக்குதல்:**

மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் சங்கம் உடுமலை ஆலாம்பாளையம் பகுதியில் நீரா

உற்பத்தியில் ஈடுபட்டுவருகிறது. இதுவே தமிழகத்தில் முதல் முறையாக நீரா எடுப்பதற்கு உரிமம் பெற்ற நிறுவனமாகும். இவர்கள் இறக்கும் நீராவை உடுமலை சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு விற்பனை செய்வதோடு சென்னை போன்ற மாநகரங்களுக்கு அனுப்புகின்றனர்.

**நீரா :** இறக்கும் முறை, அதை சேமிக்கும் முறை மற்றும் மதிப்புக் கூட்டும் முறை போன்றவை பற்றி பயிற்சி மேற்கொண்டோம்.

**வெர்மிகோல்ட் :**

உடுமலையை அடுத்த தீபாலபட்டியில் ஜெயபிரகாஷ் என்பவர் மண்புழு உரம் தயாரிக்கும் நிறுவனத்தை இயக்கி வருகிறார். இங்கு மண்புழு உரம், இயற்கை உரம், தென்னை நார் உரம், மண்புழு குளியல் நீர் போன்றவற்றை தயாரிக்கும் முறை அதன் முக்கியத்துவம் பற்றி அறிந்தோம் ரசாயன உரங்களைக் காட்டிலும் மண்புழு உரங்களைப் பயன்படுத்தினால் இயற்கை முறையில் மண் வளத்தை காக்கமுடியும் என்பதை எங்களுக்கு தெளிவாக விளக்கினார்.

**கிராம தங்கள் திட்டம் :**

நாங்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பல விவசாயிகளை சந்தித்து அவர்களின் வேளாண்மை அனுபவங்ளை அறிந்து கொண்டோம். இவ்வாறு நாங்கள் சந்தித்ததில் பல விவசாயிகள் பெரும்பாலும் ரசாயன உரங்களை நம்பியே வேளாண்மை செய்து வந்தனர் இதற்கிடையே வேறுபட்டவராக எங்களுக்குத் தென்பட்டவர் திரு. லோகநாதன் ஆவார்.

# ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின் அனுபவங்கள்

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தில் திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகாவிலுள்ள குடிமங்கலம் என்ற கிராமத்தில் மூன்று மாதங்கள் தங்கி அக்கிராமத்தின் வளர்ச்சி மேம்பாட்டு திட்டங்களையும். விவசாயத்தின் முக்கியத்துவத்தையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நேரில் கண்டு படித்தறிய ஒரு வாய்ப்பு கிடைத்தது.

குடிமங்கலம் இயற்கை எழில் சூழ்ந்த கிராமம் இது தமிழ் நாட்டின் திருப்பூர் மாவட்டத்திலுள்ள பதிமூன்று ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றாகும். இங்கு விவசாயமே முதற்கண் தொழிலாக உள்ளது. மொத்தம் 23 பஞ்சாயத்து கிராமங்களை உள்ளடக்கிய குடிமங்கலம் காற்றாலை ஆற்றல் உற்பத்திக்கு பிரபலமானது. தென்னை, மக்காணி (மக்காசோளம்) வெங்காயம், மிளகாய் ஆகியவை இங்கு பிரதான பயிர்கள் மழையின்மை மற்றும் அதற்கேற்ற பயிர்களே சாகுபடி செய்யப்படுகிறது.

**கற்றலின் தொடக்கம்**

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின் முதல் பகுதியாக 10 நாட்களுக்கு உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப் பட்டோம். இது பெதப்பம்பட்டியில் அமைந்துள்ளது. திரு பொம்முராஜ், உதவி வேளாண்மை இயக்குநர் ( ADA ) அவர்கள் அலுவலகத்தின் பணி முறை நிறுவன அமைப்பு ஊழியர்களின் பொறுப்புகள், அரசு சார்ந்த விவசாய திட்டங்கள் ஆகியவற்றைக் குறித்து விளக்கினார் சொட்டு நீர் விழிப்புணர்வு கூட்டங்களில் பங்கு பெற்றோம் அதன் மூலம் விவசாயிகளின் வயலுக்கு சொட்டு நீர் பாசனத்தை மேற்கொள்வதில் உள்ள படிகள் பற்றியும் அறிந்து கொண்டோம்.

தோட்டக்கலைத்துறை பட்டு வளர்ச்சித்துறை, வேளாண் பொறியியல் துறை, விதைத் துறை, கால்நடைத்துறை ஆகிய அலுவலகங்களை பார்வை யிட்டோம். மேலும் அங்குள்ள நிறுவன அமைப்பு, செயல்பாடுகள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்கள் பற்றியும் அறிந்து கொண்டோம். உடுமலைப் பேட்டையில் உள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடத்தை (Regulated Market) பார்வை யிட்டு, வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் திட்டங்கள் செயல்பாடுகளை குறித்தும் அறிந்து கொண்டோம். உடுமலை உழவர் சந்தையின் விலை நிர்ணயம் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் அறிந்து கொண்டோம். இவ்வாறாக பல்வேறு வேளாண் துறைகளின் வேலைகள் பற்றி அந்த 10 நாட்களில் அறிந்து கொண்டோம்.

**CHDP அறப்பணி**

ஊரகவேளாண்மை பயிற்சி திட்டத்தின் அடுத்த பகுதியாக அரசு சாரா தொண்டு நிறுவனமான கம்யூனிட்டி ஹெல்த் அண்டு டெவலப்மெண்ட் ப்ரோகிராம் (CHDP) அவர்களுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. இந்த தொண்டு நிறுவனம் 1983 ஆம் ஆண்டு

திரு. ஞானயா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இது முக்கியமாக பழங்குடி மற்றும் கிராமபுற சமுகத்தின் வளர்ச்சிக்காக செயல்படுகிறது. திரு. ஞானயா இயக்குநர் அவர்கள் CHDP - ன் பார்வை, நோக்கங்கள், செயல்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தார். பருவநிலை மாற்றம் (Climate Change) மற்றும் கரிய வேளாண்மை (Organic Forming) குறித்தும் அறிந்து கொண்டோம். பள்ளப்பாளையம், மயிலாடும்பாறை போன்ற பழங்குடி கிராமங்களுக்கு சென்று பள்ளிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தினோம். CHDP யின் மூலம் பயனடைந்த மக்களுடன் கலந்துரையாடினோம். CHDP யின் பணி காண்போரை அப்பணியில் ஈடுபட தூண்டுவதாக இருந்தது.

### மதிப்பு கூட்டப்படும் பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள்:

வேளாண்சார்ந்த தொழிற்பயிற்சி பெற நாங்கள் சென்ற தொழிற்சாலை கோல்டன் காயர்ஸ் (Golden Coirs) தென்னை சாகுபடி அதிகமாக செய்யக்கூடிய ஒன்றியங்களில் ஒன்று குடிமங்கலம் ஆகவே இங்குள்ள தொழிற்சாலைகள் பலவும் தென்னை சார்ந்த மதிப்பு கூட்டப் பெற்ற பொருட்களை தயாரிக்க ஆர்வம் காட்டுகின்றன. தென்னை மட்டையில் இருந்து கயிறு தயாரிக்கின்றன. கோல்டன் காயர்ஸ் தொழிற்சாலை இந்த கயிறு கால் மிதியடி, மெத்தை போன்றவற்றையும் தயாரிப்பதற்காக பயன்படுகிறது.

இது வேறு மாநிலங்களுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. தேங்காய் கயிற்றில் தேங்காயை விட அதிக லாபம் பெற்று வருகின்றனர். நித்யானந்தம் இவர் பஞ்சகாவ்யா, தசகாவ்யா, மண்புழு உரம் ஆகியவற்றை தயாரித்து இயற்கை விவசாயி மற்றும் உற்பத்தியாளர் என இரண்டு பணிகளையும் சிறப்புடன் செய்து வருகிறார். செல்வம் இவர்கள் அனைவரும் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தை எங்களுக்கு அறிய செய்தனர்.

விவசாய நிலங்களில் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், இயற்கை வேளாண்மை குறித்தும் செய்முறைகளை விவசாயிகளிடம் விளக்கினோம். தென்னை வேர் ஊட்டம், அமிர்தகரைசல், ஹைட்ரோபோனிக்ஸ், காளான் வளர்ப்பு முறை, பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறை போன்ற தொழில் நுட்பங்களுக்கு செய்முறை விளக்கம் அளித்தோம். இதன் மூலம் நல்ல விளைச்சல் பெறுவதற்கு எங்களுக்கு தெரிந்த சில தொழில் நுட்பங்களையும் அவர்களிடம் தெரிவித்தோம்.

விரைவான கிராமப்புற மதிப்பீடு ( RRA ) செய்ததன் மூலம் கிராமத்தின் வரைபடம், முதன்மையான பயிர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், முக்கியமான விவசாய பிரச்சனைகள் ஆகியவற்றை அறிய முடிந்தது. நாங்கள் கிராமங்களில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், அரசு அலுவலகங்கள் அவர்களின் செயல்பாடுகள் குறித்தும் அறிந்து கொண்டோம். இது தவிர நாங்கள் சமூக பங்கேற்பிலும் ஈடுபட்டோம்.

அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளுக்குச் சென்று விழிப்புணர்வு முகாம்களை கையாண்டோம். பனைவிதை நடுதல், கிராமங்களை தூய்மை படுத்துதல் போன்ற வேலைகளிலும் ஈடுபட்டோம். பல வேளாண் சார்ந்த வேலைகளையும் விவசாயிகளின் நிலங்களில் செய்தோம்.

**விவசாயத்தைக் காப்போம் :**

குடிமங்கலம் சில வருடங்களாக வறண்ட பூமியாக மாறி வருகின்றது. மழையின்மையே அதற்கு முதற்காரணம், இருப்பினும் தென்னை, மக்கானி (மக்காச்சோளம்) சோளம், பருப்புகள் ஆகியவை வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர்களாக நடவு செய்கின்றனர். பட்டுபுழு வளர்ப்பு பால் தொழில், கோழி வளர்த்தல் போன்ற விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

அது மட்டுமல்லாமல், தென்னையை மதிப்புக் கூட்டுப் பொருளாக தயாரித்து விற்பனை செய்கின்றனர். உரிய விவசாயம் செய்து மண்ணின் வளத்தை உயர்த்துகின்றனர். பருவ நிலை மாற்றம் வந்தாலும் அதையும் எதிர்கொண்டு விவசாயத்தைக் காத்து; தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர். குடிமங்கல விவசாயிகள்.

**விவசாய – சமூக சார்ந்த கற்றல் :**

ஊரக வேளாண்மை கிராம தங்கல் திட்டத்தின் மூலம் கிராமப்புற சூழ்நிலைகள் விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்பங்கள், தற்போதுள்ள தொழில் நுட்பங்களின் நிலை, விவசாயிகளின் முதன்மையான பிரச்சனைகள் அதை சரிசெய்வதற்கான வழிமுறைகள் போன்றவற்றையும் அறிய முடிந்தது எங்கள் 8 பேருக்கும் இந்த 90 நாட்களும் ஒரு புது வகையான விவசாயம் மற்றும் சமூக சார்ந்த கற்றல் ஆகவே இருந்தது.

இங்ஙனம்

கிராம தங்கல் திட்டத்தின் கீழ்
குடிமங்கலம் மாணவிகள்

**தரணி**
**தர்னி பிரியங்கா**
**திவ்யா பாரதி**
**காயத்ரி**
**குணவர்னி**
**ஹரிப்பிரீத்தா**
**ஜனனி**
**ஜெயலட்சுமி**

# ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி திட்டம் ஆனைமலை வட்டாரம்

ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆனைமலை வட்டாரத்தில் 90 நாட்கள், எட்டு மாணவிகளாக பயிற்சி பெற்றோம். இத்திட்டத்தில் 10 நாட்கள் உதவி வேளாண் இயக்குநர் இணைப்பிலும், 60 நாட்கள் கிராம தங்கல் திட்டத்திலும் இணைந்திருந்தோம். இப்பயிற்சி திட்டத்தில் நாங்கள் கற்றுக்கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறோம்.

ஆனைமலை உதவி வேளாண் இயக்குநர் பெயர் : திரு. பெருமாள்சாமி, வேளாண் அலுவலர் பெயர் : செல்வி ஸ்ரீ மதி ஆவர்.

**இந்த இணைப்பின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் :**

சொட்டு நீர் பாசன திட்டங்கள் விதைகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் பிரதான் மந்திரி ஒய்வுதியத் திட்டங்கள், பயிர் காப்பீடுத் திட்டங்கள், பிரதான் மந்திரி நீர்ப்பாசன திட்டங்கள் இவை அனைத்தையும் பற்றியும், மேலும் இவைகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் பற்றியும் அறிந்து கொண்டோம். மேலும் இந்த இணைப்பின் மூலம் இணைத்துறைகளை பற்றியும் அறிந்து கொண்டோம்.

இணைத்துறைகளாகிய தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை மற்றும் மீன்வளத்துறைகளை பற்றியும் அறிந்து கொண்டோம்.

**(NGO அமைப்பு)/அரசு சாரா அமைப்பு :**

பத்து நாட்களுக்கு, பொள்ளாச்சியிலுள்ள சேவாலயம் என்னும் அரசு சாரா அமைப்புடன் இணைந்தோம். பத்து நாட்களும் பல்வேறு விதமான அனுபவங்களை கற்றுக்கொண்டோம். அதில் ஒன்றாக இராமகாரியம் என்ற நற்பணியின் மூலம் திரு. சுகுமாரன் அவர்களுடன் இணைந்து முதியோர்களுக்கும், சாலை ஓரங்களில் வாழ்பவர்களுக்கும், பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களுக்கும் உணவளித்தோம்.

மேலும், மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களின் கலாச்சாரங்களையும் அவர்களின் இருப்பிடம் சென்று அவர்களோடு கலந்துரையாடி தெரிந்து கொண்டோம். மகாத்மாவின் 150 வது பிறந்த நாளை முன்னிட்டு சுயசரிதை புத்தகம் விற்றல் போன்றவற்றில் கலந்து கொண்டோம்.

மேலும் ரத்த தானம், கண் தானம், உடல் உறுப்புகள் தானம் போன்றவை பற்றி தெரிந்து கொண்டோம்.

சாலை பாதுகாப்பு விதிமுறைகளை பற்றியும் அறிந்து கொண்டோம். மேலும் சில முக்கிய சட்டங்களைப் பற்றியும் வழக்கறிஞர் திரு. மயில்சாமி அவர்கள் எடுத்துரைத்தார் மற்றும் மலையேற்றம் பயிற்சியிலும் பங்குபெற்று அனுபவங்களை பெற்றோம்.

இப்படியாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய அனுபவங்களை பெற்றோம்.

தொழில்துறை இணைப்பின் அடுத்த கட்டமாக விவசாயம் தொடர்பான தொழில்துறை நிறுவனங்களுக்கு சென்று அவர்களின் முதலீடு, லாபம், அன்றாட பணிகள், அவர்கள் சந்திக்கும் சவால்கள் போன்றவற்றை அறிந்து கொண்டோம்.

தென்னைக்குச் சொந்தமான பொள்ளாச்சியில் நாங்கள் தென்னை மட்டையில் இருந்து நார் எடுக்கும் நிறுவனத்திற்கு சென்று அவற்றை எடுக்கும் முறை பற்றியும் சந்தைப்படுத்துதல் பற்றியும் அறிந்து கொண்டோம்.

மேலும் கரும்பாலைக்கு சென்று, இயற்கை முறையில் வெல்லம் தயாரிக்கும் முறைப் பற்றியும் சந்தைப்படுத்துதல் பற்றியும் அறிந்து கொண்டோம். இவ் இணைப்பின் மூலம் ஒரு புதிய தொழில் நிறுவனம் தொடங்குவதற்கான படிக்கல்லாக இந்த பத்து நாட்கள் அமைந்தன.

**கிராம தங்கல் திட்டம் (60 நாட்கள்)**

ஆனைமலை வட்டாரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் தென்னை, கோகோ, ஜாதிக்காய் ஆகியவை முதன்மைப் பயிராக பயிரிட்டு வருகின்றனர். இவற்றுள் கோகோ, ஜாதிக்காயை பற்றியும், பயிர் இடைவெளி பற்றியும் தெரிந்து கொண்டோம். மேலும் ஊடுபயிராக வாழை, பாக்கு பயிரிடும் முறையை கற்றுக் கொண்டோம். இவைமட்டுமின்றி பஞ்சகாவியம், ஜீவாமிர்தம், தசகாவியம் செய்யும் முறைகளையும் கற்றுக் கொண்டு செயல்விளக்கம் செய்தோம். மேலும் மண்புழு உரம், மீன் அமிலம் தயாரிக்கும் முறைகளையும் கற்றுக் கொண்டோம். பந்தல் காய்கறிகளுக்கு A டைப் என்னும் புதியவகை பந்தலில் பயிரிடுவதை தெரிந்து கொண்டோம்.

ஆனைமலை வட்டாரத்தில் உள்ள தாத்தூர் பகுதியில் ஊரக பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டை வரைபடமாக வரைந்தோம். விதை நேர்த்தி, தென்னை வேர் ஊட்டம் அளித்தல், காளான் வளர்ப்பு முறைகள் ஆகியவற்றை செயல்விளக்கமாக செய்து காட்டினோம்.

மேலும் இயற்கை வேளாண்மை செய்யும் முறைகளை அறிந்து கொண்டோம். இவை அனைத்தையும் கிராம தங்கல் திட்டத்தின் இணைப்பில் மூலம் கற்றுக் கொண்டோம். ●

# கிராமத் தங்கல் திட்டம் - கிணத்துக்கடவு

பசுமை மாறா புத்துணர்வுடன் பூத்துக்குலுங்கும் கிணத்துக்கடவு தாலுகா கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் எங்களுக்கு ஒதுக்கப்பட்டதாகும். இத்தாலுக்காவின் கீழ் வரும் கிராமங்கள் அனைத்திலும், நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய காய்கறிகள் மற்றும் தென்னை மரங்கள் பெருமளவில் பயிரிடப்பட்டுள்ளது.

**முதல் கட்ட அனுபவமாக வேளாண் துறையினரைச் சந்தித்தல் :**
பத்து நாட்கள், நாங்கள் வேளாண் துறையுடன் இணைக்கப்பட்டோம். அங்கு அவர்கள் செய்யும் அன்றாட பணிகள், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், நோய் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் போன்றவற்றை விழிப்புணர்வு முகாம்கள் மூலம் விவசாயிகளுக்கு தெரியப்படுத்துதல், விவசாயிகளுடன் கலந்துரையாடல், விவசாயத்திற்கு வழங்கப்படும் மானியங்கள் என பலவற்றை அவர்களுடன் இணைந்து கற்றுக் கொண்டோம். அவர்களின் பங்கேற்பையும், அப்பணியில் சந்திக்கும் சவால்களையும் நாங்கள் அறிந்து கொண்டோம்.

**அரசு சாரா அமைப்புடன் எங்களது பயணம்:**

அடுத்த பத்து நாட்கள், பொள்ளாச்சி யிலுள்ள சேவாலயம் என்னும் அரசு சாரா அமைப்புடன் இணைந்தோம். அங்கு பல்வேறு சமுக பணிகளில் ஈடுபட்டோம். சாலை ஓரங்களில் இருப்பவர்கள் மற்றும் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர்களுக்கும் இராமகாரியம் என்னும் நற்பணியால் திரு. சுகுமாரன் அவர்களுடன் இணைந்து உணவளித்தோம். மேலும் மகாத்மாவின் சுயசரிதை புத்தகம் விற்றல், பழங்குடியின மக்களைச் சந்தித்து அவர்களின் கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களை தெரிந்து கொண்டோம்.

இதுமட்டுமல்லாமல், சாலை பாதுகாப்பு விதிமுறைகளை அறிதல், கண் தானம், ரத்த தானம் உடல் உறுப்புகள் தானம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் அறிந்தோம். சேவாலயத்தின் தலைவரான வழக்கறிஞர் திரு. மயில்சாமி சட்டதிட்டங்களை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த பத்து நாட்கள், வாழ்க்கையின் மறு பக்கத்தை அறிய வாய்ப்பான எங்களுக்கு அமைந்தது இதன் மூலம் சேவால யத்திற்கு நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். ●

# கிராமத் தங்கல் திட்டம் - தொண்டாமுத்தூர்

தொண்டாமுத்தூர் வட்டம் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது இப்பேரூராட்சிக்கு அருகில் புகழ்பெற்ற பூண்டி வெள்ளிங்கிரி ஆண்டவர் கோவிலும், ஈசா யோகா மையமும் மற்றும் காருண்யா பல்கலைகழகமும் சுமார் 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. மேலும் கோவை குற்றாலம் மற்றும் சிறுவாணி அணைக்கட்டு பகுதிகள் சுமார் 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்வட்டத்தின் முக்கிய தொழில் விவசாயம் ஆகும்.

**வேளாண் உதவி அலுவலகத்தில் எங்களின் பங்கு :**

கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தொண்டாமுத்தூர் உதவி வேளாண் அலுவலகத்தில் பத்து நாட்கள் இணைந்து செயலாற்றினோம். அப்பொழுது அங்குள்ள திட்டங்கள், விவசாயத்திற்கு வழங்கப்படும் மானியங்கள் பற்றியும் அங்குள்ள பயிர் வகைகள் குறித்தும், மேலும் தென்னை மரத்திலிருந்து நாட்டுச்சர்க்கரை தயாரிக்கப்படும் முறை பற்றியும் தெளிவாக கேட்டறிந்து கொண்டோம்.

மேலும் இங்கு வேளாண் அலுவலகத்தின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க விவசாயப்பள்ளி ஒன்று மாதந்தோறும் நடத்தப்படுகிறது.

**வேளாண் சார்ந்த தொழிற்சாலையில் எங்களது பங்கு :**

கிராம தங்கல் திட்டத்தின் கீழ் சிறுவாணி உழவர் உற்பத்தியாளர் சங்கத்தில் 10 நாட்கள் இணைந்து செயலாற்றினோம். இது ஒரு அரசு சாரா நிறுவனம் ஆகும். இதில் 500 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் இடைத்தரகர்களின் பங்கு இல்லாமல் விவசாயிகளை நேரடியாக வியாபாரத்தில் ஈடுபடுத்துவது ஆகும். இதில் வெற்றியும் கண்டுள்ளனர். இந்நிறுவனத்தின் முக்கிய தயாரிப்பு மரச்செக்கை பயன்படுத்தி எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய் போன்றவை கலப்படம் இல்லாத முறையில் தயாரிக்கின்றனர்.

**அரசு சாரா அமைப்பில் எங்களின் பங்கு:**

நாங்கள் டாக்டர். மீராகிருஷ்ணன் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு சாரா நிறுவனத்தில் பயிற்சி பெற்றோம். மக்களுக்கு வீட்டுத்தோட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். ஜீவாமிர்தம் முக்கியவத்துவம் பற்றி விளக்கி தயாரித்து பயிர்களுக்கு அளித்தோம். மலைவாழ் மக்களை சந்தித்து மருத்துவ முகாம் நடத்தினோம். வீட்டுத்தோட்டம் அமைத்து கொடுத்தோம். பூச்சிகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினோம் மற்றும் பொறிகளை வழங்கினோம். மரச்செக்கு எண்ணெய், நாட்டுச் சர்க்கரை மற்றும் மஞ்சள் பொடிகளை விற்பனை செய்தோம்.

**கிராம தங்கல் திட்டம்**

நாங்கள் ஒவ்வொருவரும் தனியாகப் பிரிந்து விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, நடைமுறை விவசாயத்தைக் கற்றுக் கொண்டோம். இயற்கை வேளாண்மை,

அங்கக வேளாண்மை செய்யும் விவசாயிகளை சந்தித்து அவர்களின் அனுபவத்தை பற்றி தெரிந்து கொண்டோம். அவர்கள் தோட்டத்தில் அன்றாடம் செய்யும் வேலைகளில் பங்குபெற்று கற்று கொண்டோம். வெங்காயத்தை பல நாட்கள் சேமிப்பதற்காக பயன்படுத்தும் வெங்காயப் பட்டரை பற்றி கற்றுக் கொண்டோம்.

இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு பல செய்முறைகளும் பயிற்சிகளும் அளித்தோம். இவை அனைத்தும் கிராம தங்கள் திட்டத்தின் இணைப்பின் மூலம் கற்றுக் கொண்டோம்.

இங்ஙனம்

**க.ச சௌமியா**

**ம.ாலினி**

**கா.ர. ர்மிதா**

**ரா.சி. சிவபாரதி**

**அ. சிவரஞ்சனி**

**ச. ஸ்ரீமதி**

**வ. சுபாஷினி**

**லோ. சுபா**

**சே. கவிதா**

# மடத்துக்குளம் - இயற்கை விவசாயம்

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மடத்துக்குளம் தாலுக்காவில் பாப்பன்குளம் என்ற கிராமத்தில் ராதா கிருஷ்ணன் என்னும் இயற்கை விவசாயியை காண நேர்ந்தது. அந்த கிராமம் மிகவும் எழில் சூழ்ந்து கண்களை குளிர்விக்கும் பசுமை நிறமாக காணப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தின் அதிக விளைச்சல் தரும் பகுதியாக மடத்துக்குளம் திகழ்கிறது. மடத்துக்குளம் பகுதியின் குறிப்பிட்ட சில விவசாயிகள் மட்டுமே இயற்கை விவசாயம் செய்து வருகின்றனர். இதில் திரு. ராதாகிருஷ்ணனும் ஒருவர் விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தில் இவர் ஒரு உறுப்பினராக இருக்கிறார்.

**இயற்கை விவசாயம் :**

திரு. இராதாகிருஷ்ணன், ஒரு பொறியியல் பட்டதாரி ஆவார். இவர் 8 ஆண்டுகளாக 10 ஏக்கர் நிலத்தில் இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இவர் நெல், கரும்பு ஆகிவற்றை முதன்மை பயிர்களாக பயிர் செய்து வருகிறார். நெல்லில் இவர் முக்கியமாக கிச்சடி சம்பா மற்றும் துவரை ரகங்களை பயிரிட்டு வருகிறார். இவர் ஜீவாமிர்தம் மூலம் விதை நேர்த்தியும் பயிர்களை பாதுகாக்க பூச்சி விரட்டி போன்றவற்றை பயன்படுத்தி வருகிறார்.

**ஜீவாமிர்தம் :**

மாட்டுசாணம் - 5 கிலோ, கோமியம் - 5 கிலோ மற்றும் கல் சுண்ணாம்பு - 20 கிராம் இவற்றை ஒன்றாக சேர்த்து கலக்க வேண்டும். இதை சணல் பையை வைத்து சுற்றி நிழலான பகுதியில் 24 மணி நேரம் வைக்க வேண்டும். பிறகு நெல் விதைகளை 15 நிமிடங்கள் இதில் ஊர வைத்து விதைக்க வேண்டும்.

இவர் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிர் செய்கிறார். அசோலாவை நெல் விளைச்சலில் இயற்கை உரமாக மண்ணின் தரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தி வருகிறார்.

இதில் 25 முதல் 30 விழுக்காடு வரை புரதச்சத்து உள்ளன. வைட்டமின்கள் மற்றும் பீட்டாகரோட்டின் ஆகிய சத்துகள் இதில் உள்ளன. இவர் ஒரு நாற்றில் இருந்து 35 முதல் 60 நெல் கதிர்களை விளைச்சல் கொண்டு வருகிறார். ஒரு ஏக்கருக்கு 400 Kg மகசூல் எடுக்கிறார். கிச்சடி சம்பா ரகத்திற்கு ஒரு கிலோவிற்கு 70 ரூபாய் என்ற விகிதத்திற்கு விற்கிறார். துவரை ரக நெல் மருத்துவ குணம் நிறைந் துள்ளதால் இதை ஆயுர் வேதத்திற்கு பயன்பட கேரள மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்கிறார். இந்த ரகம் கிலோவிற்கு 100 ரூபாய் என்ற விகிதத்தில் விற்கிறார்.

இவர் வைக்கோலை ஊட்டியில் உள்ள இயற்கை காளான் உற்பத்தி பண்ணைக்கு அனுப்புகிறார் இவர் 26 கிலோ வைக்கோலை 500 ரூபாய்க்கு விற்கிறார்.

**நாட்டுச்சர்க்கரை :**

இவர் 70 செண்ட் நிலத்தில் CO621 என்ற கரும்பு ரகத்தை பயிரிட்டுள்ளார். இதை இவர் கரும்பு சர்க்கரை எடுப்பதற்காக மட்டும் கரும்பை விளைச்சல் செய்கிறார். இவ்வாறு இவர் இயற்கை விவசாயத்தின் மூலம் அதிக விளைச்சலையும் அதிக லாபத்தையும் ஈட்டு வருகிறார். ●

# சட்டை அணியா சாமியப்பனின் மூலிகை வடிநீர்

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மடத்துக்குளம் தாலூக்காவில் வயலூர் கிராமத்தைக் காண நேர்ந்தது. பார்ப்பவரை பற்றியிழுக்கும் எழில்மிகு கிராமமாகும் அக்கிராமத்தில் தான் இயற்கை விவசாயி திரு. சட்டை அணியா சாமியப்பனை சந்திக்க நேரிட்டது.

இவர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தில் 1980 அறிவியல் சங்கத்தின் உறுப்பினராக இணைந்தார். மேலும் இயற்கை சூழல் பாதுகாப்பு இயக்க போராட்டம் நடத்தினார்.

**இயற்கையும் சாமியப்பனும்**

இவர் மற்ற விவசாயிகளுக்கு முன்னோடியாக திகழ்கின்றார். இவர் இயற்கை விவசாயத்திற்காக பல போராட்டங்களை மேற் கொண்டு வருகிறார். இவர் செயற்கை வனம், உர நீர், மூலிகை வடி நீர், மழை நீர் சேகரிப்பு, உயிர்வாயு உற்பத்தி போன்ற பல சூழல் நட்பு மாதிரிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மேலும் பல்லுயிர் பெருக்க நுட்பவியல் பண்ணயத்தைப் பற்றி விரிவுரைகள் கொடுத்தார். அதில் ஆய்வு நிர்வாகம், விரிவாகம், சமுதாய சீர்திருத்தம் போன்றவற்றை கற்று கொடுக்கிறார்.

**மூலிகை வடி நீர் :**

நமது உடலானது மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. வாதம், பித்தம், கபம் ஒவ்வொரு பாகங்களுக்கும் சில மூலிகை செடிகள் உள்ளது. அதில் சில செடிகள் முயல்காதி இலை, அற்பகந்தா, வெட்டிவேர், விழாமூச்சி (கற்பூரவல்லி) கல்வாழை, காட்டு இஞ்சி, மஞ்சள், அறிவாழ்மனை பூண்டு, நன்னளி, சீரகம், சந்தனக்கட்டை, பார்வெற்றிலை, ஆவாரை, சிவப்பு சந்தனமரம், சர்க்கரை செடி, ரணகள்ளி போன்ற செடிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

**உபயோகிக்கும் முறை :**

ஒரு தொட்டியில் அடி பகுதியில் கூழாங்கற்கலால் நிரப்ப வேண்டும். அதன் மேல் கரிதுண்டுகள் போட வேண்டும். அதற்கும் மேல் ஜல்லிகல், மண் போன்றவற்றை ஒன்றின் மேலே ஒன்றாக நிரப்பிக் கொள்ள வேண்டும். அனைத்திற்கும் மேல் நைலான் மெஷ், தோற்றான் கொட்டை மற்றும் மண் நிரப்பிக் கொள்ள வேண்டும். இந்த அமைப்பின் மேல்சொன்ன மூலிகை செடிகளை வளர்க்க வேண்டும். இதனை மழைநீர் சேகரிப்பாகவும், மூலிகை வடிநீராகவும் உபயோகப்படுத்தலாம். தேற்றான் கொட்டை பயன் படுத்துவதால் மழைநீர் தூய்மைப் படுத்தபடுகிறது.

**பலன்கள்**

இந்த நீரை குடி நீராக பயன்படுத்தினால் உடலில் உள்ள நோய்கள் குணமடை கின்றன. உடல் பலம் பெருகிறது. உடல் புத்துணர்ச்சி அடைகிறது. நீரிழிவு நோய் கட்டுக்குள் வைக்கலாம். இம்முறை விவசாயி சாமியப்பன் அவர்கள் பயன்படுத்தி வருகின்றார். இதன் பலன்கள் அவரின் மூலம் எங்களுக்கு அறிய வந்தது.

இயற்கையை சேகரிப்போம், உயிர்களை காப்போம்.


இங்ஙனம் கிராம் தங்கல் திட்டத்தின்
கீழ் மடத்துக்குளம் மாணவிகள்

**சுப்பிரியா**
**சுவேதா**
**மு.பா. தமிழ் மலர்**
**ஜ. வைஷ்ணவி**
**ப.வித்யபாரதி**
**பா. யுவா நந்தினி**
**மு. நே வர்ஷினி**
**மு. அனிதா**

# ஊரக வேளாண்மை பயிற்சித் திட்டத்தின் அனுவபவங்கள் தாராபுரம் வட்டாரம்

ஊரக வேளாண்மை பயிற்சித் திட்டத்தில் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தாலூக்காவில் மூன்று மாதங்கள் தங்கி அக்கிராமத்தில் விவசாயிகளுக்கான அரசு வழங்கும் பல்வேறு திட்டங்களையும், விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும்., விவசாயிகள் படும் பல்வேறு இன்னல்களையும் நேரில் காண எங்களுக்கு ஓர் வாய்ப்பாக மற்றும் அனுபவமாக அமைந்தது.

தாராபுரத்தில் மொத்தம் 28 வருவாய் கிராமங்கள் உள்ளன. தாராபுரத்தில் விவசாயம் மட்டும் இல்லாமல் அதிகளவில் நெல் விதை உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ளது. மொத்தம் 55 நெல் விதை உற்பத்தி நிலையங்கள் உள்ளன. தஞ்சாவூர், திருநெல்வேலி, காரைக்குடி போன்ற மாவட்டங்களில் நெல் உற்பத்தி அதிகளவில் இருந்தாலும் அம்மாவட்டத்திற்கே நெல் விதைகளை வழங்குவது தாராபுரமாகும். வெங்காயம், தக்காளி, மக்காணி, தென்னை போன்றவைகள் தாராபுரத்தில் அதிகளவில் பயிரிடப்படுகிறது.

**அனுபவம் பயணத்தின் முதல் தொடக்கம் :**

ஊரக வேளாண்மை பயிற்சித் திட்டத்தின் தொடக்கமான முதல் பத்து நாட்களுக்கு துணை வேளாண்மை இயக்குநர் திருமதி லீலாவதி அவர்களுடன் இணைந்துக் கொண்டு பல்வேறு அரசுத் திட்டங்களையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றோம். விவசாயிகளின் குறைகளை எவ்வகையில் தீர்க்கிறார்கள் என்பதையும் அனுபவபூர்வமாக கற்றுக்கொண்டோம்.

தோட்டக்கலைத்துறையில் பட்டுப்பூச்சி வளர்ப்பு, பொறியியல் துறை, விதைத்துறை, கால் நடை மருத்துவமனை ஆகிய அலுவலகங் களையும் பார்த்தோம். நாங்கள் விவசாயிகளுக்கான வெங்காயப் பட்டறைத் திட்டம், மானாவாரி மேம்பாட்டுத் திட்டம், மழை நீர் சேகரிப்புத் திட்டம், நுண்ணுயிர்பாசனத் திட்டம் போன்ற திட்டங்களையும் பற்றி அறிந்துக் கொண்டோம்.

**அரசு சாரா அமைப்பு :**

அஸ்வத் அரசு சாரா அமைப்பின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற பல்வேறு திட்டங்களுடன் இணைந்து பல்வேறு உதவிகளை செய்து கொண்டு வருகின்றனர். அதுமட்டுமில்லாமல் பெண்களுக்கான தையல் பயிற்சியையும் கற்றுக் கொடுக்கிறார்கள். இவ்வாறு பல்வேறு வகையான உதவிகளைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

**தொழிற்சாலை சார்ந்த அனுபவம் :**

எங்களது கிராம தங்கல் திட்டத்தில் தொழில் சார்ந்த பயிற்சியினைப் பெறுவதற்காக வெங்கடேஸ்வரா விதை நிறுவனம் மற்றும் சன் காயர் மில் என்ற இரண்டு நிறுவனத்துடன் பத்து நாட்கள் இணைந்து கொண்டோம். வெங்கடேஸ்வரா விதை நிறுவனத்தில் விதைகளை தரம் பிரிக்கும் முறைகளையும், விதைச்சான்றிதழ்

வழங்கும் முறைகளைப் பற்றியும், அறிந்து கொண்டோம். மேலும் அந்நிறுவனத்தில் பல்வேறு நெல் விதை ரகங்களை பார்வையிட்டோம். விதை உத்திரவாதச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள விவரங்களை அறிந்து கொண்டோம்.

சன் காயர் மில் நிறுவனத்தில் தென்னை மட்டையிலிருந்து தென்னை நார்பிரிக்கும் முறைகளை நேரடியாக அறிந்து கொண்டோம். தயார் செய்யப்பட்ட தென்னை நார், விற்பனை செய்யும் வழிமுறைகளை பற்றியும், அத்தொழிலில் உள்ள கடினத் துவத்தையும் தெரிந்து கொண்டோம். மேலும் தென்னை நாரின் விவசாயப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தினையும் அறிந்து கொண்டோம்.

இவ்விரு தொழில் நிறுவனத்தில் எடுத்துக் கொண்ட பயிற்சியின் மூலம் தொழில் வளர்ச்சியில் விவசாயத் துறையின் பங்களிப்பையும், சில தொழில் துறை உத்திகளையும் அறிந்து கொண்டோம்.

**கிராம தங்கல் நலத்திட்டம் :**

கிராம தங்கல் திட்டத்தின் மூலம் 60 நாட்களில் சிறு, குறு மற்றும் பெரிய விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் அனுபவத்தை நாங்கள் கற்றலாக கற்றுக் கொண்டோம் ●

# தென்னைக்கு ஊட்டசத்து டானிக்

தென்னையில் குரும்பைக் கொட்டுதல் பாரம்பரிய குணம் தென்னையில் ஒரு குலையில் 40 முதல் 50 வரை குரும்பைகள் தோன்றினாலும் குறைந்த அளவே தேங்காய்களாக மாறுகின்றன. மற்றவை உதிர்ந்து விடுகின்றன. இவற்றை நிவர்த்தி செய்ய வேர் மூலம் தென்னைக்கு ஊட்டசத்து டானிக் செலுத்தலாம்.

**ஊட்டசத்து டானிக் அவசியம் :**

மரத்திற்கு தேவையான நுண்ணூட்ட சத்துகளை சரியான விகிதத்தில் நேரடியாக மரத்திற்குள் செலுத்த முடிகிறது. மேலும் மரத்தில் நோய் பூச்சி தாக்குதல் மற்றும் வறட்சி ஆகியவற்றிக்கு இயற்கையான எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

**வேர் மூலம் ஊட்டச்சத்து :**

மரத்திலிருந்து இரண்டு முதல் மூன்று அடி தள்ளி சுமார் நான்கு அங்குல ஆழத்திற்கு கீழ் உறிஞ்சும் வேர்கள் அமைந்திருக்கும். இந்த பகுதியில் பென்சில் கனமுள்ள வெளிர்சிவப்பு நிறவேர் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும். வேரின் நுனியை மட்டும் கத்தி அல்லது பிளேடு உபயோகித்து சாய்வாக சீவி விடவும். பின் டானிக் உள்ள பையின் அடிவரை வேரை நுழைத்து வேரையும் பையின் மேல் பாகத்தையும் நூலால் கட்டி விடவும். மண்ணின் ஈரத்தன்மை குறைவாக இருந்தால் ஒரு மணி நேரத்தில் டானிக்கை வேர் உறிஞ்சிவிடும். ஆறு மாதத்திற்கு ஒருமுறை செலுத்த வேண்டும். ஒரு மரத்திற்கு 200 மிலி டானிக் தேவைப்படும். ●

# ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டம் குடிமங்கலம்

ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின், ஒரு பகுதியாக உடுமலை தாலுக்காவில் குடிமங்கலம் என்ற கிராமத்தைக் காண நேர்ந்தது. வறண்ட பகுதி ஆயினும் இப்பகுதி விவசாயிகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை கொண்டு செயற்கை முறையிலான வேளாண்மையையும், இயற்கை முறையிலான வேளாண்மையையும் மிக சிறப்பாக செய்து முன்னேற்றம் கண்டு மகிழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் புதுபுது திட்டங்களை நிறைவேற்றி, விவசாயிகளுக்கு உதவி புரிந்து தங்களது பணிகளைச் சிறப்போடு நிலை நாட்டி வருகின்ற குடிமங்கலம் வட்டாரத்திற்கு உட்பட்ட உதவி வேளாண் இயக்குநர் அலுவலகம் பெதப்பம்பட்டியில் அமைத்துள்ளது.

மலைவாழ் மற்றும் கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை மேம்படுத்த தன் உதவி கரத்தை நீட்டிய கம்யூனிட்டி ஹெல்த் மற்றும் டெவலப்மெண்ட் ப்ரோகிராம் (CHDP) சார்ந்த தன்னார்வலர்களது பணியோ வியக்கத்தக்கதாகவும் பிறரை அப்பணியில் ஈடுபட தூண்டுவதாகவும் இருந்தது.

தென்னை உற்பத்திக்கே பெயர்போன பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் ஒன்றான குடிமங்கலத்தில் தேங்காய் வியாபாரத்தில் மட்டும் ஈடுபடாமல், தேங்காய் மட்டையில் இருந்து கயிறு, கால் மிதியடி மெத்தை, மஞ்சி, கோகோ பித் ஆகிய மதிப்பு கூட்டப் பெற்ற பொருட்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் சிறப்பாக செயல்படுத்தி அதன் மூலம் லாபம் பெற்று வருகின்றனர். இதில் நாங்கள் கண்ட "கோல்டன் காயர்ஸ்" எங்களது ஊரக பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியான கிராம தங்கல் திட்டத்தில் நாங்கள் அங்குள்ள விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களது அனுபவத்தை பகிர்ந்து கொண்டோம். அங்கு நாங்கள் இயற்கை, செயற்கை மற்றும் ஒருங்கிணைந்த வேளாண் முறைகளைக் கடைப்பிடிப்பதை கண்டோம்.

**இயற்கை விவசாயி**

வளர்ந்து வரும் இயற்கை விவசாயியான கங்காரமக்கைச் சார்ந்த நித்யா ஜீரோ பட்ஜெட் எனும் முறையில் மல்பெரி சாகுபடி செய்து பட்டு புழுவளர்ப்பில் சாதனை புரிந்து வருகிறார்.

அதில் தென்னை கழிவுகள் மற்றும் பல விதமான இலைகளை குழிகளில் மூடி மக்கிய பிறகு அதன் சத்துக்கள் தானாகவே மல்பெரிக்கு கிடைக்கும் வகையில் புதிய முறையைக் கையாண்டுவருகிறார்.

மழை நீரைச் சேகரிக்கும் வகையில் பண்ணைக்குட்டை அமைத்துள்ளார்.

சுத்திகரிப்பு படுக்கை அமைத்து அதில் இயற்கை முறையான இலைச்சாறு பூச்சி விரட்டிகளை வடிகட்டி நுண்ணீர் பாசனத்தின் மூலம் செலுத்துகிறார்.

நாட்டு மாடுகளை மட்டுமே உபயோகித்து அதில் இருந்து வரும் கழிவுகளை உரமாக விவசாயத்தில் பயன்படுத்துகிறார். மேலும் அப்பகுதியில் தென்னையில் மல்பெரியை ஊடுபயிராக வளர்த்து தனித்துவமாக விளங்கி வருகிறார்.

எங்கள் கிராம தங்கல் திட்டத்தின் மூலம் பல வளர்ந்து வரும் இயற்கை விவசாயிகளை சந்தித்தோம். அவர்களில் நாங்கள் சந்தித்த முதல் இயற்கை விவசாயி பூளவாடியை சேர்ந்த லட்சுமிபதி அவர்கள். அவர் நாம் அடிக்கும் பூச்சிக்கொல்லி மருந்துகளால் மண் வளம் குறைந்து வருகிறது என்பதை உணர்ந்து கடந்த 2 ஆண்டுகளாக இயற்கை விவசாயத்தை பின்பற்றி வருகிறார்.

தென்னை மரத்தில் வேர்களின் வளர்ச்சிக்காகவும் சாறுவடிதல் நோயை கட்டுப்படுத்துவதற்காகவும் அவர் இயற்கை உரம் ஒன்றை தயாரித்து அவருடைய 6 ஏக்கர் தோப்பில் பயன்படுத்துகிறார். அந்த உரம் தயாரிக்கும் முறையை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். 5 கிலோ நிலக்கடலை, 2 கிலோ சர்க்கரை, 200 மிலி தண்ணீர் மற்றும் ஒரு குப்பி (Bottle) ஆகியவற்றை ஒரு தொட்டியில் நன்றாக கலக்க வேண்டும். இதனை 7 நாட்களுக்கு ஒருமுறை எதிர் கடிகார திசையில் (anti-clock wise) கலக்க வேண்டும். 30 நாட்களுக்கு பிறகு இதனை மாட்டு சாணம் சேர்த்து 20-25 கிலோ என்றளவில் ஒரு மரத்திற்கு செலுத்த வேண்டும். இதன் மூலம் வேர் முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் பல மடங்குபெருகி வேரின் வளர்ச்சியை மேம்படுத்தும் என்று அவர் தெரிவித்தார். இயற்கை பூச்சி விரட்டிகளையும் அவர் பயன்படுத்தி வருகிறார்.

மக்காசோளப்பயிர், மல்பெரி மற்றும் தென்னை ஆகிய பயிர்களில் இயற்கை உரம், பூச்சி விரட்டிகளை பயன்படுத்தி பார்த்ததின் மூலம் நல்ல விளைச்சல் கிடைத்ததாகவும், அதற்கான செலவும் பூச்சிக் கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்கள் வாங்குவதை காட்டிலும் குறைவாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இயற்கை விவசாயம் பற்றிய எங்கள் சிந்தனை மெருகேற்றினார் லட்சுமிபதி

தொன்று தொட்டு
பனிந்து குனிந்து
திலகமிட்டு
பாதம் பதித்து
பறைசாற்றி
ஏர்பூட்டி எட்டுத்திக்கும்
உழவவோட்டி
வேங்கையாய்
உழுதவன் சிரம் உணர்ந்து
நிற்க
வருணத்துளிகளோடு
வியர்வைத்துளிகளையும்
உரமாக்கி
ஊண் உயிர் எல்லாம்
மருந்தாக்கி
செழித்து நின்ற
பயிர்களை எல்லாம்
அறுத்து எறித்து
அனைவருக்கும் படைத்தவனல்லயோ
எம் உழவன்


இங்ஙனம்
கிராமத்தங்கல் திட்டத்தின் கீழ்
குடிமங்கலம் மாணவிகள்
**மு.தாரணி**
**ல.தர்ஷினி பிரியங்கா**
**சு.ப. திவ்யாபாரதி**
**பொ.காயத்ரி**
**மு.குணவர்ஷினி**
**செ. ஹரிப்ரித்தா**
**ம.ஜனனி**
**ப. ஜெயலட்சுமி**

# இயற்கை விவசாயம்

திரு. சந்துரு மற்றும் திருமதி சாந்தி அவர்கள் எட்டு ஆண்டுகளாக தகவல் தொடர்பியல் துறையில் பணியாற்றினார்கள். அதன் பின்பு இயற்கை மீதுள்ள ஆர்வத்தினாலும், நம்மாழ்வார் மீதுள்ள பற்றினாலும் இயற்கை விவசாயத்திற்கு மாறினார்கள். அவர்கள் இயற்கை முறையிலான உரங்களைப் பயன்படுத்தியும், நாட்டு ரக வகைகளைப் பயன்படுத்திக் கொண்டும் இயற்கை முறையிலேயே விவசாயம் செய்கின்றார்கள். இவர்கள் தங்களது அன்றாட வாழ்வில் பயன்படும் பொருட்களையும் இயற்கையான முறையிலேயே பயன்படுத்து கின்றார்கள். இதன் மூலம் தங்களால் முடிந்தவரை சுற்றுச்சூழலை மாசுபடாமல் பாதுகாக்கின்றார்கள். இதன் மூலம் அன்றாட தேவைகளை இயற்கையான முறையிலே பூர்த்தி செய்துக் கொண்டு சுற்றுச்சூழலை மாசுபடாமல் பாதுகாக்கலாம்.

**நான்கு ஏக்கரில் பத்துவகை காய்கறிகள்:**

திரு. ஜகதீஷ் என்பவர் ஏழு வருடங்களாக இயற்கை விவசாயம் செய்து கொண்டு வருபவர். இதனால் மண் வளமானது அதிக சத்துக்கள் கொண்டதாக உள்ளது. இவர் நான்கு ஏக்கரில் பத்து வகை காய்கறிகள் பயிரிட்டும், அதனை தனது சொந்த முறையிலேயே விற்பனை செய்து கொண்டும் வருகிறார். அதுமட்டுமில்லாமல் அவரது நிலத்தில் விழும் மழைநீரை சேகரித்துக் கொண்டும் வருகிறார். இதன் மூலம் குறைந்த நிலத்தில் அதிக வருமானத்தை பெறுவதையும், சொந்த முறையில் விற்பனை செய்வதையும் அனுபவமாக பெற்றுக் கொண்டோம்.

இளம் விவசாயி திரு. பரத் ராகேஷ் அவர்களை சந்தித்தோம். அவர் கழிவுகளைச் சிதைப்பதற்கு மண்புழுக்களுக்கு பதிலாக Black Soldier Fly-யைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இவை கோழிகளுக்கு நல்ல தீவனமாக பயன்பட்டு அதன் உடல் எடையை அதிகரிக்கிறது. அதுமட்டுமில்லாமல் இவர் கொம்புசாண உரத்தையும் பயன்படுத்துகிறார். இவரைப் போல் எதிர்காலத்தில் ஓர் இளம் விவசாயி ஆவோம் என உறுதி கொள்கிறோம்.

செயற்கையான பொருள்களைக் கொண்டு விவசாயம் செய்யாமல் இயற்கையான பொருள்களைக் கொண்டு விவசாயம் அதிகரிப்போம். சுற்றுச் சூழலையும் பாதுக்காப்போம். விவசாயிகள் இன்றி எவராலும் உயிர் வாழ இயலாது எனவே, விவசாயம் செய்து அனைவரும் நல் உடல் நலத்துடன் இருப்போம்.

இங்கனம்

தாராபுரத்தில் குழு மாணவிகள்


**பெ. கார்த்திகா**

**சு.கவிதா**

**அ. காவிய ஸ்ரீ**

**ர.கி. கீர்த்தினா ஸ்ரீ**

**ச. கீர்த்திகா ஸ்ரீ**

**அ. கீர்த்திகா**

**வி. கீர்த்திகா ஆனந்தி**

# இயற்கை ஊட்டச்சத்து - திரவியங்கள்

**பஞ்சகாவ்யம் தயாரிக்கும் முறை :**

1. பசுவின் புதுசாணம் - 5 கிலோ
2. பசுவின் கோமியம் - 3 லிட்டர்
3. பசு மாட்டுப்பால் - 2 லிட்டர்
4. பசுந்தாள் - 2 லிட்டர்
5. பசு நெய் - 1 லிட்டர்
6. கரும்புச்சாறு
7. இளநீர் - 2 லிட்டர்
8. வாழைப்பழம் - 12
9. கள் - 2 லிட்டர்

பசுவின் புதுசாணம் கோமியம் நெய் ஆகியவற்றை நன்கு கலந்து 3 நாட்களுக்கு அடிக்கடி கலக்கி வைக்கவும் நான்காம் நாள் இந்தக்கலவையுடன் இதர பொருட்களான தயிர், நெய், கரும்பு சாறு, இளநீர், வாழைப்பழங்கள், கள் ஆகியவற்றை கலக்க வேண்டும். இந்தக் கலவையை குறைந்த பட்சம் 4 நாள்கள் நன்றாக கலக்கி 15 நாள்கள் வைத்திருந்து 19 ஆம் நாள் முதல் பயிர்களுக்குத் தெளிக்கலாம்.

**ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை**

நாட்டு பசுஞ்சாணம் - 10 கிலோ

நாட்டு பசுங்கோமியம் - 5 முதல் 10 லிட்டர்

வெல்லம் - 2 கிலோ

கரும்புச்சாறு - 4 லிட்டர்

இரு விதை இலைத்தாவரத்தின் தானிய மாவு - 2 கிலோ

தண்ணீர் - 200 லிட்டர்

மேற்கூறியவற்றைத் தொட்டியில் விட்டுக்கலக்க வேண்டும். தினமும் 3 முறை 3 நாட்களுக்கு தவறாமல் கலக்கிவிட வேண்டும். ஒரு கிராம் மண்ணில் 5 லட்சம் கோடிக்கும் அதிகமான நுண்ணுயிர்கள் இருக்கின்றன். இந்த நுண்ணுயிரிகளின் கலவை தான் ஜீவாமிர்தம்.

**கன ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை**

பசுஞ்சாணம்-100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயிறு மாவு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். உப்புமா பதம் வருவதற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு நாட்டு மாட்டுச் சிறு நீரை கலக்க வேண்டும். பின்பு உருட்டி நிழலில் காயவைத்து தேவைப்படும் போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்.

**மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறை**

5 கிலோ மீன் கழிவு

5 கிலோ நாட்டு வெல்லம் ஆகியனவற்றை காற்றுப் புகாத பிளாஸ்டிக் வாளியில் நன்கு கலந்து பின்னர் காற்றுப்புகாத வண்ணம் மூடிபோட்டு மூடிவிட வேண்டும். பின்னர் 30 நாட்கள் கழித்து நன்கு வடிகட்டி தெளிப்பானில் 20 லிட்டர் தண்ணீர் 100 மி.லி மீன் அமினோ அமிலக்கரைசல் நன்கு கலந்து தெளிக்க வேண்டும்.

**அமிர்தக்கரைசல் தயாரிக்கும் முறை :**

நாட்டுப்பசு சாணம் - 10 கிலோ

நாட்டுப் பசு கோமியம் - 10 லிட்டர்

*வெல்லம் - 250 கிராம்*

*தண்ணீர் - 200 லிட்டர்*

*முதலில் நாட்டுப் பசுஞ்சாணம் மற்றும் நாட்டுப்பசு கோமியம் இவற்றை ஒரு வாளியில் (அ) ஏதாவது ஒரு கலனில் எடுத்துக் கொண்டு அதில் வெல்லம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை சேர்க்க வேண்டும். இந்த கலவையை 24 மணி நேரம் நிழலான இடத்தில் வைக்க வேண்டும். இப்பொழுது அமிர்த கரைசல் தயார்.*

**தச காவ்யா தயாரிப்பு முறை:**

*வேம்பு*

*எருக்கம்*

*கொ*

*நொச்சி*

*ஊமத்தை*

*காட்டாமணக்கு*

*ஆடாதோடா*

*புங்கம்*

*இதனை பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிராக செயலாறு இயக்கியாக பயன்படுகிறது. தாவர வடிசாரை தயாரிக்க மாட்டுச்சிறு நீர் 1:1 என்ற விகிதத்தில் (1 கிலோ நறுக்கிய இலைகள் - 1 லிட்டர் மாட்டுச்சிறு நீர்) தழைகளை முக்கி 10 நாட்களுக்கு அப்படியே வைக்க வேண்டும்.* ●



**அருட்செல்வர் ஐயா**

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.
– திருவள்ளுவர் (குறள் 1032)



ஆப்செட் பிரஸ், கோவை. 0422-2672789